


25.4.2024

தலைப்புச் செய்திகள்

1. நாடுமுழுவதும் நாளை நடைபெறும் 2ஆவது கட்ட வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் முழுவீச்சில் மேற்கொண்டுள்ளது.

2. 4-ம் கட்ட தேர்தல் நடைபெறும் 96 மக்களவை தொகுதிகளில் வேட்பு மனுக்கள் தாக்கல் இன்று நிறைவடைகிறது.

3. நாட்டில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய தடயவியல் ஆய்வகங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தேசிய மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

4. தமிழக அரசு பள்ளிகளில் இதுவரை 3 லட்சத்து 25 ஆயிரம் மாணாக்கர் சேர்க்கை நடைபெற்றுள்ளதாக பள்ளிக்கல்வி துறை அறிவித்துள்ளது.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

2-ம் கட்ட தேர்தல்

நாடுமுழுவதும் 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 88 மக்களவை தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

இத்தொகுதிகளுக்கான பிரச்சாரம் நேற்று முடிவடைந்தது.

இத்தேர்தலில் ஆயிரத்து 198 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேர்தல் நடைபெறும் அண்டை மாநிலங்களாக கேரளம், கர்நாடகம், ஆந்திர எல்லை பகுதிகளில் தீவிர வாகன சோதனைகளை பறக்கும் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

வாக்குப்பதிவு விடுமுறை

தமிழகத்தில் பணியாற்றும் அண்டை மாநில தொழிலாளர்கள் மக்களவை தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக ஊதியத்துடன் கூடிய விடுமுறையை பணி நிறுவனங்கள் கட்டாயம் வழங்க வேண்டும் என்று மாநில தொழிலக துறை தெரிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

4-ம் கட்ட தேர்தல்

இதனிடையே அடுத்த மாதம் 13-ம் தேதி 96 மக்களவை தொகுதிகளுக்கு, நடைபெறும் 4-ம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் இன்று நிறைவடைகிறது.

மனுக்கள் நாளை பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்பப்பெற வரும் 29-ம் தேதி கடைசிநாளாகும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

3-ம் கட்ட தேர்தல்

இதனிடையே 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வரும் 7 ஆம் நடைபெற உள்ள 3ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அரசியல் கட்சியினர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய பிரதேச மாநிலம் மொரேனாவில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி மத்திய அரசு எவ்வித பாகுபாடுமின்றி கோடிக்கணக்கான மக்களுக்கு இலவச ரேசன் பொருட்களை வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

தமது அரசின் நல திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

உத்திரபிரதேச மாநிலம் ஆக்ரா மாவட்டத்தில் இன்று தேர்தல் பரப்புரையில் அவர் ஈடுபடுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் திரு.ஜெய்ராம் ரமேஷ் பேசுகையில் பிஜேபியின் கொள்கையால் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்ததாக குற்றம் சாட்டியுள்ளார்.

பணவீக்கம் கட்டுப்படுத்தப்படவில்லை என்றும், பொருளாதாரம் சீராக இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

5-ம் கட்ட தேர்தல்

இதனிடையே 49 மக்களவை தொகுதிகளுக்கு அடுத்தமாதம் 20-ம் தேதி நடைபெறும் 5-வது கட்ட தேர்தலுக்கான அறிவிக்கை நாளை வெளியிடப்பட்டு வேட்பு மனு தாக்கலும் தொடங்குகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

தேர்தல் ஆணையம்

இதனிடையே தேர்தல் பிரச்சாரத்தின் போது தேர்தல் விதிமுறைகளை மீறியதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து வரும் 29ஆம் தேதிக்குள் பதில் அளிக்க கோரி பிஜேபி தலைவர் திரு.ஜே.பி.நட்டா மற்றும் காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கேவிற்கு தேர்தல் ஆணையம் கடிதங்களை அனுப்பியுள்ளது.

அனைத்து முக்கிய பேச்சாளர்களும் விதிமுறைகளை முறையாக பின்பற்றவும் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் பஸ்வாராவில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் மூத்த பிஜேபி தலைவர் திரு.நரேந்திரடிமோடியின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் தெரிவித்த புகாரின் அடிப்படையிலும்

கேரள மாநிலம் கோட்டயத்தில் நடைபெற்ற பரப்புரையில் திரு.ராகுல் காந்தியின் தேர்தல் உரையாடலுக்கும் எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி அளித்த புகாரின் அடிப்படையிலும் ஆணையம் இந்தகடிதங்களை அனுப்பியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிதர் அரமனே

கஸகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் இன்று தொடங்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு பாதுகாப்பு அமைச்சர்களின் வருடாந்திர 2 நாள் கூட்டத்தில் இந்திய பாதுகாப்பு செயலர் திரு.கிரிதர் அரமனே தலைமையிலான பிரதிநிதி குழு பங்கேற்கின்றது.

ஷாங்காய் ஒத்துழைப்பு உறுப்பு நாடுகளின் மண்டல பாதுகாப்பு நிலைமை மற்றும் ஒத்துழைப்பு குறித்து இதில் விரிவாக ஆராயப்படுகிறது.

இந்தியாவின் உரையை திரு.கிரிதர் அரமனே இந்த கூட்டத்தில் வாசிக்கிறார்.

இந்த பயணத்தின் ஒருபகுதியாக ஷாங்காய் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் அவர் மேற்கொள்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

மனித உரிமை ஆணையம்

நாட்டில் குற்றவியல் வழக்கு தொடர்பான ஆய்வுகளை விரைவுபடுத்த அதி நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய தடயவியல் ஆய்வகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்று தேசிய மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற ஆணைய உயர்நிலை கூட்டத்தில் இதனை தெரிவித்துள்ள இதன் தலைவர் திரு.அருண்குமார், ஆராய்ச்சிக்கான சிறப்பு பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நீதிமன்ற விசாரணைகளின்போது அரசு வழக்கறிஞர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர், அவர்தம் பணிநியமனத்தில் தகுதியும், வெளிப்படைத்தன்மையும் உறுதிசெய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அரசு வழக்கறிஞர்களுக்கு உரிய அலுவலக கட்டமைப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அரசு வழக்கறிஞர்கள், தடயவியல் நிபுணர்கள், காவலர்கள் இடையே முறையான ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும் என்று அவர் எடுத்துரைத்தார்.

இதற்காக குற்றவியல் நீதியியல் முறையில் சீர்திருத்தங்கள் வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

பள்ளிக்கல்வித்துறை

தமிழக அரசு பள்ளிகளில் இதுவரை 3 லட்சத்து 24 ஆயிரத்து 884 மாணாக்கர் சேர்ந்துள்ளதாக பள்ளிக்கல்வி துறை தெரிவித்துள்ளது.

சென்ற மாதம் 3 ஆம் தேதி தொடங்கிய மாணாக்கர் சேர்க்கையின்படி இதுவரை அரசு பள்ளிகளில் 2 லட்சத்து 62 ஆயிரம் பேரும்,

அரசு உதவி பெறும் பள்ளிகளில் 62 ஆயிரத்து தொள்ளாயிரம் பேரும் சேர்ந்துள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

விழுப்புரம் மாவட்டத்தில் அரசின் 16 பாதுகாப்பு அம்சங்கள் இல்லாத பள்ளி வாகனங்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.பழனி எச்சரித்துள்ளார்.

விழுப்புரத்தில் தனியார் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்த அவர் அனைத்து வாகனங்களிலும் ஜுன் மாதத்திற்குள் பாதுகாப்பு அம்சங்கள் நடைமுறைபடுத்த வேண்டும் என உத்தரவிட்டார்.

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறும் கோடைகால நீச்சல் பயிற்சி முகாமில் சிறுவர் சிறுமியர் சேர்ந்து பயன்பெறலாம் என்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

மலேரியா தினம்

உலக மலேரியா ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மலேரியாவைக் கட்டுப்படுத்த உலகளாவிய முயற்சிகளை மேற்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

மலேரியா நோயை முற்றிலும் அகற்றுவதற்கான முதலீடுகளை தொடரவும், அதற்கான நீடித்த அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதுமே இந்நாளின் முக்கிய நோக்கமாகும்.

“மலேரியாவிற்கு எதிரான போராட்டத்தை விரைவுபடுத்துவோம் என்பதை கருப்பொருளாக கொண்டு இந்தாண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

சேலம்

சேலம் மாவட்டம் குருவம்பட்டி உயிரியில் பூங்காவில் வனத்துறை மேற்கொண்ட நடவடிக்கையினால் ஏராளமான விலங்குகள் கடும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதாக, வனத்துறை அதிகாரி தெரிவிக்கிறார்.

---- வாய்ஸ் -----

ழூழூழூழூழூழூழூழூழூழூ

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் பழனியில் அனல் பறக்கும் வெப்பம் காரணமாக, மா விளைச்சல் வீழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

----- வாய்ஸ் -----

ழூழூழூழூழூழூழூழூழூழூ

வானிலை

தமிழ்நாட்டில் அடுத்த 5 நாட்களில் அதிக பட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உள் மாவட்ட சமவெளி பகுதிகளில் ஒருசில இடங்களில் வெப்பநிலை 38 டிகிரி முதல் 41 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும் கூறியுள்ளது.

கடலோர பகுதிகளில் காற்றின் ஈரப்பதம் 50 முதல் 80 சதவிகிதமாக அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஈரோட்டில் அதிகபட்ச வெப்பநிலையாக இன்று 42 டிகிரி செல்சியஸூம்,

வேலூரில் 41.6

திருப்பத்தூரில் 41.4

சேலத்தில் 41.1

கரூர் பரமத்தியில் 41 டிகிரி செல்சியஸூம்

தர்மபுரியில் 40.7

திருத்தணியில் 40.6

திருச்சியில் 40.5 டிகிரி செல்சியஸூம், பதிவாகியுள்ளது.

ழூழூழூழூழூழூழூழூழூழூ

வனத்துறை - கைது

தென்காசி மேற்கு தொடர்ச்சி மலைபகுதிகளில் விலங்குகளை வேட்டையாடும் குற்ற சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நாட்டு வெடிகுண்டு வைத்து காட்டுப்பன்றியை வேட்டையாடிய 3 பேர் வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதை தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகள் மூவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

திருவாரூர் கோவில்

திருவாரூர் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவில் பங்குனி விடையாற்றி உற்சவத்தின் நிறைவாக, தெப்பத்திருவிழா இன்றிரவு நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

---- வாய்ஸ் -----

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்நாதசுவாமி திருக்கோவில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் வரும் 6 ஆம் தேதி நடைபெறுவதால் மாவட்டத்திற்கு அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலாக அடுத்த மாதம் 29 ஆம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும்.

இருப்பினும் உள்ளூர் விடுமுறை தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு பொருந்தாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் இன்று இரவு ஏழரை மணிக்கு சன் ரைசர்ஸ் ஹைதராபாத் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

செஸ் குகேஷ்

கனடாவில் கேண்டிடேட்ஸ் செஸ் சேம்பியன் பட்டத்தை வென்று தாயகம் திரும்பிய தமிழக வீரர் குகேஷிற்கு, சென்னை விமான நிலையத்தில் இந்திய செஸ் சம்மேளனம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் இன்று உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு